| சாட்சி : PW1<br>தங்கராசு | அ.வ.எண்.117/2016 | 01.03.2024 |
|---|---|---|

<u>குறுக்கு விசாரணை</u>

எனது பிரமாண வாக்குமூலத்திற்கு விவரம் சொன்னது நான் தான். நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து கல்பாளையம் கிராமத்தில் உள்ளது அதன் சர்வே எண் எனக்கு ஞாபகம் இல்லை. அதன் பட்டா எண்.437 ஆகும். மொத்த விஸ்திரணம் 1.24 ஏக்கர் 3.06 சென்ட் ஆகும். வழக்கு சொத்தின் கிழக்கில் ஜெயராமன் உள்ளார். மேற்கில், வடக்கு மற்றும் தெற்கில் யார் உள்ளனர் என்று சரியாக ஞாபகம் இல்லை. வழக்கு சொத்தில் கட்டுமானம் எதுவும் இல்லை. வழக்கு சொத்து தரிசு நிலமாக உள்ளது. அதில் மின் இணைப்பு மற்றும் மோட்டார் எதுவும் இல்லை. வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் 1ம் பிரதிவாதி அப்துல்சலாம் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கு சொத்து பூர்வீக சொத்தாகும். அதற்கு ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்கு உண்டான ஆவணம் கை வசம் இல்லாதததால் தாக்கல் செய்யவில்லை.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க 07.03.2024 அன்று குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.